ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,490 —1965 අගෝස්තු 27 වැනි සිකුරාදා — 1965.8.27

14,490 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV—உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. | 99 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | — | விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | நாணுவிதம் .. .. .. | — |


## உள்ளூராட்சி அறிவிப்புகள்

L.D.—B 139/46

### களியாட்ட வரிக் கட்டளைச் சட்டம்

(267 ம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் யாழ்ப்பாண மாவட்டத்து நெல்லியடிப் பட்டின சபையால் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம் உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு அப்பிரிவின் ((2) ஆம் உட்பிரிவின் நியதிப்படி பிரசுரிக்கப்படுகின்றது :—

#### தீர்மானம்

இச்சபை, (267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ், சபையின் நிருவாக எல்லைகளுக்குட்பட்ட பிரதேசத்தில் நடைபெறும் (கட்டளைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டிருக்கின்றபடியான) களியாட்டங்களுக்கான பிரவேசக் கட்டணங்களின்மீது இதனடியில் குறித்துள்ள விகிதங்களின்படியான ஒரு வரியை, இத்தீர்மானம் கசெற்றிற் பிரசுரமாகும் தேதியிலிருந்து, இத்தால் விதித்துத் திரட்டுகின்றது.

| கட்டணத் தொகை<br>வரித்தொகை நீங்கலாக, பிரவேசக் கட்டணம்— | வரி விகிதம்<br>ரூ. ச. |
|---|---|
| (அ) 20 சதத்துக்கு குறையாமலும் 50 சதத்துக்கு மேற்படாமலுமிருந்தால் .. | 05 |
| (ஆ) 50 சதத்துக்கு அதிகமாகவும் ரூ. 1 க்கு மேற்படாமலும் இருந்தால் .. .. | 10 |
| (இ) ரூ. 1 க்கு அதிகமாகவும் ரூ. 1.50 க்கு மேற்படாமலுமிருந்தால் .. .. | 0 15 |
| (ஈ) ரூ. 1.50 க்கு அதிகமாகவும் ரூ. 2 க்கு மேற்படாமலுமிருந்தால் .. .. | 0 20 |
| (உ) ரூ. 2 க்கு அதிகமாகவும் ரூ. 3 க்கு மேற்படாமலுமிருந்தால் .. .. | 0 30 |
| (ஊ) ரூ. 3 க்கு அதிகமாகவும் ரூ. 4 க்கு மேற்படாமலுமிருந்தால் .. .. | 0 40 |
| (எ) ரூ. 4 க்கு அதிகமாகவும் ரூ. 5 க்கு மேற்படாமலுமிருந்தால் .. .. | 0 50 |
| (ஏ) ரூ. 5 க்கு அதிகமாகவும் ரூ. 10 க்கு மேற்படாமலுமிருந்தால் .. .. | 1 00 |
| (ஐ) ரூ. 10 க்கு மேற்பட்டால் | |
| (i) முதலாவது ரூ. 10 க்கு .. | 1 00 |
| (ii) கூடுதலான ரூ. 5 அல்லது அதற்குக் குறைந்த தொகை ஒவ்வொன்றுக்கும் .. | 1 00 |

ஏ. ஈ. கொகர்லி மொரகொட,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 14.8.1965

8–1067—27.8.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,490

### முக்கிய விளம்பரம்

1965 ம் ஆண்டு புரட்டாதி (செத்தெம்பர்) மாதம் 10 ந் திகதி வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால் 1965 ம் ஆண்டு புரட்டாதி (செத்தெம்பர்) மாதம் 9 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1965 ம் ஆண்டு புரட்டாதி (செத்தெம்பர்) மாதம் 4 ந் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

பேர்னட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1965 ம் ஹூ ஆவணி (ஓகத்து) மீ 20 ந் உ.

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 இன் 60 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான (257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 37 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக்கொண்டு, உள்ளூராட்சி அமைச்சர், முருகேசன் திருச்செல்வம் ஆகிய நான், இந்த அறிவித்தல் மூலம், யாழ்ப்பாண மாவட்டத்துப் புங்குடுதீவுக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு, அக்கிராமப் பிரதேசத்தில் அப்பிரிவின்கீழ் ஒரு நிலவரியை விதிக்கவும் அறவிடவும் அதிகாரமளிக்கின்றேன்.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு, 12.8.1965.

8–1062—27.8.65 நிதிகதிப வர்த்தமானி இல. 14,490

---

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

---

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.